
நகரத்தார் குரல்

(சமூக இலக்கிய மாத இதழ்)



தன்னை யுணர்ந்த நகரத்தார் தமிழைப்போற்றும் பண்புடையார்
கன்னித் தமிழ்சேர் குரலுக்குக் கயற்கண்ணம்மை காப்பாமே

மார்ச் 1982

உ
சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக இலக்கிய மாத இதழ்)

கௌரவ ஆசிரியர்:
லெ. அழகுசுந்தரம் செட்டியார்

ஆசிரியர்:
வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:
சுப. அ. நடராசன் செட்டியார்

குரல் 1
ஒலி 2

துன்மதி
மாசி

மார்ச்
1982

நாத்திகன் வீட்டிலும் நடக்கும் தெய்வதம்
ஆத்திகன் வீட்டிலும் அருளும் சங்கமம்
சாத்திரக் கூட்டினுள் தழைத்த மெய்த்தவம்
பாத்திரம் நான் அதில் பால் என் கண்ணனே.
— கண்ணதாசன்

அலுவலகம் :
25, வடக்குச் சித்திரை வீதி,
மதுரை-625001.
தொலைபேசி ; p. p 26668

கன்னியர்கள் வாழ்வுபெற மாலை
காளையர்கள் வாழ்வுயர வேலை



காட்சி யளிப்பாள் மீனாட்சி

சொ. சொ. மீ. சுந்தரம் எம். காம்.

மாலை சூட்டிக் கணவர்ப் பேணல்
மங்கைய ருக்குத் தனிமாட்சி
மகுடம் சூட்டிக் கணவர்க் குத்தென்
மதுரை தந்தவள் மீனாட்சி
ஆலின் கீழே நால்வர்க் கருளும்
அப்பன் அருளுக் கவள்சாட்சி
அன்பே வளரும் நெஞ்சக் கோயில்
அதிலே அன்னை அரசாட்சி
ஏலக் குழலி ஞானக் கழலின்
இணையே என்றும் துணையாகும்
இடராம் வெள்ளம் படரும் போதில்
என்றும் காக்கும் அணையாகும்
காலன் வந்தால் ஓலமி டாதீர்
காட்சி யளிப்பாள் மீனாட்சி
கைகள் பெற்ற புண்ணியம் அன்னை
கழலைத் தொழுவோம். அது போதும்.

வருமான அடிப்படையில் சலுகை

****

" பாரத நாடு பழம்பெரும் நாடு
நீரதன் புதல்வர்இந் நினைவகற் றாதீர் "

என்று பாடினார் பாரதியார். பாரத நாட்டை உணர்த்தியது போலத் தமிழகப் பெருமை சொன்ன பாரதியார் 'கல்வி சிறந்த தமிழ்நாடு' என்று குறிப்பிட்டார். நம் தமிழகத்தைக் கல்வியிலும், தொழிலிலும் சிறந்ததாக ஆக்கத் தீர்மானித்த தமிழக அரசு பிற்பட்டோருக்கான கல்வி, வேலை வாய்ப்புச் சலுகைகளைச் சிறப்பாகச் சிந்தித்து செம்மையான தீர்மானமாகக் கொண்டு வந்தது.

ஆண்டுக்கு ஒன்பதாயிரம் ரூபாய் வருமானத்துக்குட்பட்ட வருவானமுள்ளவர்களுக்குச் சலுகையளிக்கக் கொண்டு வரப்பட்ட, காலத்திற்கு மிக மிகத் தேவையான அத்தீர்மானத்தை, என்ன காரணத்தாலோ, தமிழக அரசு கைவிட்டு விட்டது.

உண்மையிலேயே பிற்பட்டவர்களை முன்னேற்றுவதில் அக்கறையுள்ள தமிழக அரசு, இத் தீர்மானத்தை மீண்டும் கொண்டு வந்து, நிறைவேற்றினால் தகுதியிருந்தும் வசதி இல்லாத பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் நெஞ்சங்கள் நன்றி செலுத்தும். இந்திய நாட்டின் வளர்ச்சிக்குத் தமிழக அரசு வழிகாட்ட வேண்டுகிறோம்.

அருமை மகளுக்கு ஆதரவு தருவது யார்?

கவிஞர் சிவல்புரி சிங்காரம்
கீழச்சிவல்பட்டி.

பிரும்மாவின் படைப்பினிலே அழகு மிக்க
  பெண்ணென்று 'நகரத்தார்' குலத்தில் தோன்றி
வருமானம் ஏதுமில்லாக் குடும்ப மொன்றில்
  வளர்ந்தேதான் பதினெட்டு வயத டைந்தாள்!
அருமை மகள் திருமணத்தை ஏற்க, வீட்டை
  அடகுவைத்துப் பெற்ரோர்கள் முடித்து வைத்தார்
ஒரு மாதம் ஆனவுடன் மகள்வீட் டுக்கே
  உற்சாகத் தோடுதந்தை செல்ல லானர்!

சீதனத்தைத் தினம் கேட்டுக் கொடுமை செய்தே
  சிகரெட்டால் சுட்டுவைக்கும் கணவன், என்றும்
போதையிலே சாமானைத் திருடி விற்றுப்
  பிழைக்கின்ற பொல்லாத மாமன், நாளும்
மோதுகிற வாயாடி நாத்தி, மாமி
  முள்ளாகக் குத்துகின்ற இவர்க ளோடும்
ஆதரவே இல்லாமல் இருப்ப தெல்லாம்
  அப்பனிடம் முறையிட்டே அழுகப் போனள்!

பூங்கோதை மணம்காண வீடு வீடாய்ப்
  போய்த் தந்தை யாசித்துப் பல்லைக் காட்டி
வாங்காத பேர்களிடம் தடிவட் டிக்கு
  வகையின்றிக் கடன் வாங்கித் துடித்து, வீட்டு
மேங்கோப்பை விற்றுவந்த கதையை எல்லாம்
  மேலோட்ட மாய்நினைத்துப் பார்த்த தாலே
'வாங்க' எனச் சொல்லிவிட்டு வேறு ஏதும்
  வனிதையவள் வாய்திறந்து சொல்ல வில்லை!


'நலம் தானு?' மகளே! என் றந்தத் தந்தை
  நாவெல்லாம் தழுதழுக்கக் கேட்ட போது
புலம்பாமல் நலமென்றே மகளும் சொல்லப்
  பூரித்துப் போயிருந்தார் தந்தை! காட்டில்
மலைப்பாம்பு மத்தியிலே தவளைக் கூட்டம்
  மகிழ்வோடு வாழ்ந்திடுமா? என்றே எண்ணிக்
குழம்பாமல் தான்கூட 'நலமே' என்ருர்!
  குடியிருக்க வீடில்லா நிலைம றந்தார்!

நம்மை வாழ்த்துகிறார்கள்

We are happy to note that you propose to publish a monthly Magazine "Nagarathar Kural" which will serve for the welfare of Nattukkottai Chettiar community.

The gracious blessings of Their Holinesses are conveyed for the success in your venture.

The sacred prasadams of Sri Sharada Chandramouliswara blessed by Their Holinesses are sent herewith.



Yours Sincerely,
(S. D) K. M. Balasubramanian,
Personal Assistant to His
Holiness Sri Jagadguru
Shankaracharya Dakshinam-
naya Sri Sarada Peetham
Sringeri-577139
(Karnadaka)

நகரத்தார்களின் வழிபாட்டிற்குரிய குருபீடமாக விளங்குவது கோவிலூர் ஆதீனம். அந்தக் கோவிலூர் ஆதீனத்திற்கும் குருபீடமாக விளங்குவது சிருங்கேரி சாரதா பீடம். நகரத்தார்களின் வருங்காலச் சிறப்புக்கு இந்த வாழ்த்து உற்ற துணையாகுமல்லவா!

✤✤✤✤

நமது நகரத்தார் குலம் வளர, அவர்களிடையே உள்ள வரதட்சணை போன்ற வேண்டாச் செய்கைகளை எடுத்தியம்ப வேண்டி நல்லெண்ணத்தோடு தொடங்கப்பட்டுள்ள "நகரத்தார் குரல்" பதிப்பினை எமது மன்றம் சார்பிலும் வேந்தன்பட்டி மக்கள் சார்பிலும் மன மகிழ்ச்சியுடன் உளமார வரவேற்கின்றோம்.

இளைஞர் நற்பணி மன்றம்
வேந்தன்பட்டி.

'நகரத்தார் குரல்' என்ற பெயரில் நம் சமூகப் பத்திரிகை வெளியிடுவது கண்டு உள்ளன்போடு வரவேற்கின்றேன். வளர்பிறைச் சந்திரன் போல் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அது வளர எல்லாம் வல்ல இறையைப் பிரார்த்திக்கிறேன்.

L. N. அழகப்பன்
ஜெனரல் மானேஜர்
அடைக்கப்பா நடுநிலைப் பள்ளி
பள்ளத்தூர்.

✤✤✤✤

நம் இனத்தார் நலன் கருதியும் நாட்டிற்கும் மொழிக்கும் சமயத்திற்கும் தொண்டாற்ற "நகரத்தார் குரல்" வெளிவருவதறிந்து இன்புறுகின்றேன்.

காந்தி அண்ணாமலை
இரங்கூன்

✤✤✤✤

நகரத்தார் குரல் ஒலிக்கும் நேரம் நல்ல நேரம். புத்தாண்டில் சத்தோடு இக்குரல் ஒலிக்கட்டும். சல் சல்.... நாங்கள் செவி சாய்க்கக் காத்திருக்கிறோம். மணி ஓசை மகேசன் ஆலயத்தில் மக்கள் குரல் மன்பதையில் ஒலிக்கட்டும்.

முல்லை காந்தி ராமசாமி
தேவகோட்டை

✤✤✤✤

நகரத்தார்கள் நலன் கருதி "நகரத்தார் குரல்" தொடங்கப் பட்டுள்ளது கண்டு பெருமகிழ்ச்சியடைகிறோம். நமது சமூகம் முன்னேற இது சிறந்த சேவை செய்யும் என உறுதியாக நம்புகிறேன்.

நா. அருணாசலன்
கண்டவராயன்பட்டி

✤✤✤✤

ஏற்றமிகு நகரத்தார்களின் இளைஞர்கள் குரல் எதிரொலிக்க வேண்டுமென்ற உயரிய கருத்தோடு, ஓங்கு புகழ் மதுரையம்பதியிலிருந்து "நகரத்தார் குரல்" வெளிவரும் நாளை நோக்கி ஆவலுடன் எதிர்நோக்கும் இளைஞர்களில் நானும் ஒருவன்.

இராம. முத்துக்கருப்பன்
திருக்கோயிலூர்.

✤✤✤✤

மும் மூர்த்திகளின் தலைவன் முக்கண்ணன். முச்செயல்களையும் தில்லைவாழ் சிதம்பரமே செய்யவல்லான். அதனால்தான் கௌரவ ஆசிரியர், ஆசிரியர், வெளியிடுபவர் ஆகிய முப்பெரும் காரியங்களைச் செய்யவல்ல தங்களின் பெயர்களில் ஆலவாய் அண்ணலே ஆட்சி செலுத்துகின்றான். முப்பெயரும் அமைந்திருக்கும் நேர்த்தி ஒரு நல்ல துவக்கமென்றே சொல்ல வேண்டும். இந்த நல்ல துவக்கம் நமது சமூக முன்னேற்றத்திற்கு நலமாக அமையட்டும்.

பழ. மெ. பெரி. மெய்யப்பன்
மானேஜிங் டிரஸ்ட்டி
மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், காரைக்குடி.

நல்லவர்கள் பலரால் துவக்கப்பட்டுள்ள ''நகரத்தார் குரல்'' நம்மில் நலிந்தோருக்கும் மிகுந்தோருக்கும் நல்லுரை வழங்கவும் சீர் பெறவும் செவ்வனே பணி செய்யக் காத்திருக்கிறது. ''நகரத்தார் குரல்'' மேன் மேலும் வளர்ச்சியடைந்து பெருமைகள் பெற வேண்டுமென வாழ்த்துகிறேன்.

சுப. நாகப்பன்
பலவான்குடி

****

நம் சமூகத்தின் ஏற்றத் தாழ்வுகளைச் சீர் செய்யவும் அவ்வல நிலைமைகளை அரசுக்கு எடுத்துரைக்கவும் ''நகரத்தார் குரல்'' பத்திரிகை அவசியமே. வருங் காலத்தில் எல்லா அன்பர்களும் எதிர்நோக்கிப் படிக்கும் இதழாக ''நகரத்தார் குரல்'' மலரும் என்று எதிர்பார்ப்போமாக.

நா. இராமநாதன் செட்டியார்
ஆத்தங்குடி

****

முயற்சி திருவினையாக்கும் என்பதற்கேற்ப தங்களின் நன் முயற்சியால் ''நகரத்தார் குரல்'' நன்கு தழைத்துச் செழித்து நம் இனத்தவருக்கு நல்லன செய்திட எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

முரு. கண்ணத்தான்
மதுரை

****

''நகரத்தார் குரல்'' மென்மேலும் வளர்ந்து சீரும் சிறப்புடன் இயங்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

அரிமா ஆ. நடராஜன்
கோயமுத்தூர்

****

''நகரத்தார் குரல்'' கண்டு மகிழ்ந்தோம். நகரத்தார் நலன் கருதி இத்தகைய பத்திரிகை ஒன்று வெளிவருவது அவசியமே. பிப்ரவரி இதழில் வெளிவந்துள்ள கட்டுரைகள் கண்ணியமாகவும் கருத்துடனும் இருப்பது சிறப்புக்குரியதாகும். இதன் கௌரவ ஆசிரியராக திரு. லெ. அழகுசுந்தரம் செட்டியார் அவர்களும் ஆசிரியராக திரு. வி.என். சிடி. அவர்களும் பொறுப்பேற்றிருப்பது பாராட்டுக்குரியது. ''நகரத் தார் குரல்'' வளர்ந்து நகரத்தார் சமூகம் சீரும் சிறப்புடன் திகழ சிறந்த சேவைகளைச் செய்யும் என நம்புகிறோம். நல்வாழ்த்துக்கள்.

நா. அருணாசலன்
காரியதரிசி, சேவா சமாஜம்
திருப்புத்தூர் வட்டம்

****

''நகரத்தார் குரல்'' கண்டேன். வாழ்க! வளர்க! நமது கவியரசர் கூறுவது போல் நகரத்தார் நாம் சிகரத்தார் ஆவோம். வணிகக் குல விளக்காய் வாழத் தெரிந்த நம் சமூகம், ஏற்ற எண்ணமின்றி எழில் சிதைந்து கிடக்கின்றது. வற்றாத ஜீவநதியாய் பொருள் ஈந்து கை பழகி, கலை ஏற்றி, கடல் கடந்து புகழ் பாடிய சமூகம் வரண்டு போய்

பொருள் இழந்து கை உதறி, கடை மூடி, கடல் மறந்து சீரழிகிறது. இருப்போரை நினைவூட்டி இழப்போரைப் பாதுகாத்து மறுபடியும் எவ் வழியினும் தலைநிமிர பரணிபாட விரும்புகிறேன்.

காரைக்குடி நாராயணன்
எழுத்தாளர், திரைப்பட இயக்குநர், சென்னை.

❖❖❖❖

''நகரத்தார் குரல்'' நாளும் வளர்ந்து வார இதழாக வெளிவருவதற்கு ஸ்ரீ காசி விஸ்வேஸ்வரர், விசாலாட்சி அம்பாளைப் பிரார்த்திக்கின்றேன்.

பஞ்சாட்சரம் செட்டியார்
மானேஜர், நகரச் சத்திரம்,
அலகாபாத்.

❖❖❖❖

நாட்டினை உயர்த்து கின்ற
நகரத்தார் பங்கு பற்றி
நாட்டினுக் குணர்த்த வந்த
நகரத்தார் குரலே வாழ்க!
கூட்டிலே கிடப்போர் எண்ணம்
குரலிலே விரியும் போது
பூட்டியே கிடந்தோர் வாழ்க்கை
பொலிந்திடும் குரலே வாழ்க!

அரு. சோமசுந்தரன், எம். ஏ., பி. டி.,
காரைக்குடி.

எங்கள் ஊர்

நகரத்தார்கள் வாழ்ந்துவரும் செட்டிநாட்டு ஊர்களைப் பற்றி 'எங்கள் ஊர்' என்ற தலைப்பில் ''நகரத்தார் குர''லின் இந்த இதழிலிருந்து' கட்டுரைகள் தொடர்ந்து வெளிவரும். எழுத்தார்வமிக்க நகரத்தார்களிடமிருந்து கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. (புகைப் படங்கள் கிடைத்தாலும் அனுப்பி வைக்கலாம்.) அந்தந்த ஊரைச் சேர்ந்தவர்கள் அவரவர்களது ஊரைப் பற்றி எழுதியனுப்புவது நலம். கட்டுரை எழுதுவதற்காகச் சில குறிப்புக்களைக் கீழே கொடுத்திருக்கிறோம்.

கட்டுரையில் இடம்பெற வேண்டியவை :

சூழலும் இடமும் - காரணப் பெயர் - கோயிற் பிரிவுகளுடன் புள்ளி விவரம் - படித்த ஆண்கள், பெண்களின் சதவிகிதம் - நகரக் கோவிலின் அல்லது கோவில்களின் பெயர்கள் - முக்கிய திருவிழாக்கள் - பொது நிறுவனங்கள் - நகரத்தார் நிறுவிய அறக் கட்டளைகள் - சத்திரங்கள் - மடங்கள் - அரசியல், இலக்கியம் பிற கலைத் துறைகளில் இருப்பவர்கள் - சங்கம், பொதுமடம், நூலகம், வாசகசாலை, வணிகம், தொழில் - திருமணமாகாத பெண்கள் - வேலை வாய்ப்புத் தேடும் பட்டதாரிகளின் சதவிகிதம் - இன்றைய தொழில் வளர்ச்சி மற்றும் ஊரின் குறைபாடுகள்.

"நகரத்தார் குரல்' பத்திரிகை ஒரு நல்ல வழிகாட்டியாக அமையும்"

"நகரத்தார் குரல்" வெளியீட்டு விழாவில் அமைச்சர் காளிமுத்து பேச்சு

"நகரத்தார் குரல்" மாத இதழின் வெளியீட்டு விழா 25-2-82 அன்று மதுரை நகர விடுதியில் கோலாகலமாக நடைபெற்றது. வெங்கடாசலம் செட்டியார் அவர்கள் இறைவணக்கம் பாட கலைமகள் இராம. நடராசன் செட்டியார் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள்.

வி. என். சிதம்பரம் செட்டியார்

"நகரத்தார் குர"லின் ஆசிரியரும், மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலின் அறங்காவலர் குழுத் தலைவருமான வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் அறிமுக உரையாற்றினார்கள். அவர்கள் தமது உரையில் "நகரத்தாரின் பண்பாட்டுச் சிறப்பை எல்லோரும் உணர வேண்டும் என்பதே நம்முடைய நோக்கம். ஆலயத்தில் திருநீற்றைக்கூட ஒரு முறைக்கு மேல் வாங்கினால் சிவன் சொத்தை எடுப்பது போலாகும் என எண்ணிப் பணியாற்றிய செட்டிநாட்டுப் பெருமக்களின் தொண்டுள்ளத்தை இன்றைய பரம்பரையினர் உணர வேண்டும். இதுவே இப்பத்திரிகை தொடங்கப்படுவதன் நோக்கம்" என்று குறிப்பிட்டார்கள்.

மாண்புமிகு அமைச்சர் காளிமுத்து

தமிழக வேளாண்மைத்துறை அமைச்சர் மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் விழாவிற்குத் தலைமையேற்றுப் பேசிய போது —

"நகரத்தார் சமூகத்திடம் பணிவும் பாசமும் பக்தியும் நன்றியும் செலுத்தக் கடமைப்பட்டவன் நான். கருமுத்துவின் கல்லூரி இல்லையென்றால் இந்தக் காளிமுத்து இல்லை. என் படிப்புத் தடைப்பட்ட போது மீண்டும் என்னைக் கல்லூரியில் சேர்த்துப் படிக்க வைத்து உற்சாகப்படுத்தியவர் கருமுத்து. என் தமிழ் வளர்ச்சிக்குக் காரணமாக இருந்தவர் டாக்டர் தமிழண்ணல். நயத்தக்க நாகரிகம் உடையவர்கள் நகரத்தார்கள். இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும் வல்லது அரசு என்று அரசுக்குச் சொன்ன இலக்கணத்தை தனி மனிதனும் பின்பற்ற வேண்டும் என்று காட்டியவர்கள் நகரத்தார்கள்.

நகரத்தார் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்படுவார்கள். நகரத்தார்களின் கோரிக்கை நிறைவேற அரசு தன்னாலான ஏற்பாடுகளைக் காலமறிந்து செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நகரத்தார் குரல் பத்திரிகை ஒரு நல்ல வழிகாட்டியாக, பாடப் புத்தகமாக அமையும்."

— இவ்வாறு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.



''நகரத்தார் குரல்'' வெளியீட்டு விழாவில் கலைமகள் திரு. இராம. நடராஜன் செட்டியார் வரவேற்புரை நிகழ்த்துகிறார். அருகே கௌரவ ஆசிரியர் திரு. லெ. அழகுசுந்தரம் செட்டியார், திரு. கருமுத்து தி. சு. சொக்கலிங்கம் செட்டியார், விழாத் தலைவர் தமிழக அமைச்சர் மாண்புமிகு கே. காளிமுத்து அவர்கள்.



இவ்விழாவில் 101ஆவது நபராக அமைச்சர் மாண்புமிகு கே. காளிமுத்து வருகைப் பதிவேட்டில் கையொப்பமிடும் இனிய காட்சி. அருகே திரு. பழ. கருப்பையா, திரு. எம். எஸ்பி. அருணாசலம் செட்டியார், திரு. ந. எழிலரசன்.



''நகரத்தார் குர''லின் முதல் இதழை 'சிவநெறிச் செல்வர்' திரு. கருமுத்து தி. சு. சொக்கலிங்கம் செட்டியார் வெளியிட திரு. எம். எஸ்பி. அருணாசலம் செட்டியார் பெற்றுக்கொள்ளும் கவின்மிகு காட்சி.



கௌரவ ஆசிரியரின் பேச்சை ரசிக்கும் அமைச்சர் மாண்புமிகு கே. காளிமுத்து, ஆசிரியர் திரு. வி. என். சிதம்பரம் செட்டியார், திரு. கருமுத்து தி. சு. சொக்கலிங்கம் செட்டியார், மதுரை மாநகராட்சியின் முன்னாள் துணைமேயர் திரு. கே. எஸ். சந்தானம்.

இதழ் வெளியீடு :

''நகரத்தார் குர''லின் முதல் இதழை சிவநெறிச் செல்வர் கருமுத்து தி. சு. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் வெளியிட, சென்னை அம்பத்தூர் நகரத்தார் மன்றத் தலைவர் எம். எஸ்பி. அருணா சலம் செட்டியார் அவர்கள் பெற்றுக்கொண்டார்கள்.

கருமுத்து சொக்கலிங்கம்

கருமுத்து தி. சு. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் பேசும் போது ''நம்மவர்கள் பினுங்கிலேயே தைப்பூசத்தன்று முருகப் பெரு மானை சிறப்பாக எழுந்தருளச் செய்யும் பெருமை பெற்றவர்கள். நம் மிடத்திலுள்ள பொருமை குறைந்தால் நாம் முன்னேறலாம்'' என்று குறிப்பிட்டார்கள்.

அருணாசலம் செட்டியார்

எம். எஸ்பி. அருணாசலம் செட்டியார் அவர்கள் பேசியபோது ''ஒவ்வொரு குடும்பத்தாரும் ஒவ்வொரு நகரத்தாருக்கு உதவி செய்ய வேண்டும்'' என்று குறிப்பிட்டார்கள்.

அடுத்து இரா. அரங்கசாமி அவர்கள், பழ. கருப்பையா அவர்கள், ந. எழிலரசன் அவர்கள் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

பழ. கருப்பையா

பழ. கருப்பையா அவர்கள் பேசியபோது ''அமைச்சர் காளிமுத்து அவர்கள் எளிமையானவர்கள். காலம், தகுந்த தலைவர்களை உருவாக்கு கிறது என்பதற்கு அமைச்சர் அவர்கள் நல்ல எடுத்துக்காட்டு. 9 ஆயிரம் ரூபாய்க்குக் குறைவாக வருமானமுள்ளவர்கள் பிற்பட்டவர் கள் எனத் தமிழக அரசு அறிவித்தது. அது பாராட்டத்தக்கது. பிற்பட்ட மக்களிலும் செல்வர்கள் பெரும்பாலான இடத்தை அடைகி ருர்கள் என்பதை உணர்ந்த தமிழக அரசு, பிற்பட்டவர்களிலும் பிற் பட்டவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை என்பதை உணர்ந்து இந்த நல்ல அறிவிப்பைச் செய்தது. உண்மையான எளியவர்களை உயர்த்த அறிவிப்புச் செய்த நீங்கள் ஏன் அதிலிருந்து பின்வாங்கினீர்கள் என்பதுதான் புரியவில்லை. நகரத்தார் சமூகம் இன்று ஒற்றுமை உணர்வு குறைந்த காரணத்தினால் அரசை நம்பி வாழக்கூடிய நிலைக்கு வந்துவிட்டது. அமைச்சரவர்களே, நகரத்தார்களுக்கு 1500 ஆண்டு களாக வராதது இந்தத் தடியெடுக்கும் பழக்கம்தான். நம்மோடு ஒத்துழைக்கும் தமிழக அரசு நம்மோடிணைந்தது'' என்று குறிப்பிட் டார்கள்.

ந. எழிலரசன்

ந. எழிலரசன் அவர்கள் பேசியபோது ''நகரத்தார் இருக்குமிட மெல்லாம் 'நகரத்தார் குரல்' ஒலிக்க வேண்டும். நமக்கென்று தனிப் பத்திரிகை, சார்பற்றதாக இருந்தால் நகரத்தார் கருத்துக்களை வெளி யிடமுடியும்'' என்று குறிப்பிட்டார்கள்.

இராம. ஏகப்பன் அவர்கள் நன்றி கூற விழா இனிதே நிறைவுற்றது.

இவ்விழாவில் மாண்புமிகு அமைச்சர் காளிமுத்து அவர்களுக்கு ஆசிரியர் திரு, வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் பொன்னுடை அணிவித்தார்கள்.

''நகரத்தார் குர''லை கண்ணைக் கவரும் முறையில் அச்சிட்டுக் கொடுத்த 'எக்ஸ்போ' பிரிண்டர்ஸ் உரிமையாளர் திரு. ஏ.பழனியப்பன் அவர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசு வழங்கினார்கள்.

விழா சிறப்பாக நடைபெற ''நகரத்தார் குர''லின் ஆலோசனைக் குழு உறுப்பினர்களான கலைமகள் திரு. இராம. நடராசன் செட்டியார், திரு. ஆர் எம்.முத்தழகப்ப செட்டியார், திரு. எஸ். என். எஸ். சொக்க லிங்கம் செட்டியார், திரு. எஸ்பி. முத்துராமன் செட்டியார் ஆகியோர் பெரிதும் ஒத்துழைத்தார்கள்.




அமைச்சர் மாண்புமிகு கே. காளிமுத்து அவர்கள் தலைமையுரை யாற்றுகிறார். அருகே திரு. சுப. அ. நடராசன் செட்டியார், திரு. எல். அழகுசுந்தரம் செட்டியார், திரு. பழ. கருப்பையா.

உங்களுக்குத் தெரியுமா ?

டெலிவிஷன், கேமரா, டெலிபோன், டெலஸ்கோப், டைனமோ, பவுண்டன் பேனா ஆகிய பொருட்களைக் கண்டுபிடித்தவர்கள் யார்? அவர்கள் எந்த நாடுகளைச் சேர்ந்தவர்கள்? எந்தெந்த ஆண்டுகளில் அவை கண்டுபிடிக்கப்பட்டன? விவரம் தெரிந்து கொள்ள அடுத்த பக்கத்தைப் பாருங்கள்.

தேரும் திருப்பணியும்

மன்னர் பின்னோர் என்று நகரத்தார்களைக் குறிப்பிடுவார்கள். முன்னாளில் ஆலயங்களுக்கான தேர்களை அரசர்களே செய்து வைத்தார்கள். இப்பொழுது நகரத்தார்கள் தேர்களைச் செய்து தம் பெருமையை நிலைநாட்டிக் கொள்கிறார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு பாகனேரி அரு. கி. கிருஷ்ணன் செட்டியார் அவர்கள் பெருமுயற்சியால் பாகனேரி ஸ்ரீ புல்வநாயகியம்மனுக்குத் திருத்தேர் செய்து வைக்கப்பட்டது. இப்பொழுது புதுக்கோட்டை மாட்டத்தைச் சேர்ந்த கண்ணன்காரன் குடி என்ற சாத்தாங்கோயிலில் அருள்மிகு பூரணபுஷ்கலையுடனுகிய தர்மசாஸ்தாவுக்கு, ராயவரம் முவீ. அழ. முவீ. அழகப்ப செட்டியார் அவர்களின் பெருமுயற்சியால், திருத்தேர் செய்து வைக்கப்பட்டுள்ளது.



கண்ணன்காரன்குடி என்ற சாத்தாங் கோயிலுக்காகச் செய்து வைக்கப்பட்ட அழகுமிகு திருத் தேர்

இத் திருத்தேர் உலா 29-1-82 பகல் 12-30 மணிக்குப் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ். டி. காசிராஜன் ஐ. ஏ. எஸ். அவர்கள் தலைமையிலும் மதுரை அருள்மிகு மீனாட்சி

சுந்தரேசுவரர் திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் முன்னிலையிலும் சிறப்பாக நடைபெற்றது.



முவீ. அழ. முவீ.
அழகப்ப செட்டியார்

இத்தேர் நாகர்கோயில் ரதப் பயிற்சி நிலையத்தில் 10 மாத காலத்தில் செய்யப்பட்டது. தேரின் உயரம் 32 அடி. தேக்கு, வெண்தேக்கு, வாகை, வேங்கை, கோங்கு ஆகிய மரங்களால் செய்யப்பட்டது. தொண்டை மண்டலத் தேர்களின் அமைப்பில் இதைச் செய்ய மொத்தம் இரண்டரை இலட்ச ரூபாய் செலவாயிற்று.

இக்கோயிலுக்கும் திருத்தேர்த் திருப்பணிக்கும் பெரும் பணியாற்றிய ராயவரம் சித. ப. முவீ. குடும்பத்தாரின் நல்லற நெஞ்சம் பாராட்டத் தக்கது. சுமார் 26 ஆண்டுகளுக்கு முன் இக்கோயிலை குடநீராட்டுச் செய்யும் பேறு பெற்ற இக்குடும்பத்தார் நாளும் வளர்ந்து நற்பணியாற்றுக!

உங்களுக்குத் தெரியுமா? - விடை

பொருள்	கண்டுபிடித்தவர் பெயர்	நாடு	கண்டுபிடித்த ஆண்டு
Television	Baird	Scotland	1926
Camera	Land	U. S. A.	1948
Telephone	Alexander Grahambell	U. S. A.	1876
Telescope	Lipper Shey	Netherlands	1608
Dynamo	Faraday	England	1831
Fountain pen	Waterman	U. S. A.	1884

தகவல் : வலையபட்டி டாக்டர் ஜெ. பழநியப்பன்

உ
சிவமயம்.

தண்ணீர்மலையான் தாள்பணிவோம்

பி. எல். சிங்காரம் - பினாங்கு.

தண்ணீர்மலையானைத் தாள்பணிந்து தெண்டனிட்டால்
தாளாத நோய்தீரும் தரணியிலே புகழ்சேரும்
கண்ணீர் பெருக்கியவன் கழல்போற்றித் தெண்டனிட்டால்
காணாத காட்சிதந்து காலமெல்லாம் காத்திடுவான்.
[தண்ணீர்மலையானை...

மனதார நினைப்பவர்க்கு மனக்குறைகள் அகன்றோடும்
வாயாரப் பாடிவிடில் வற்றாத செல்வந் தரும்
நெஞ்சாரப் புகழ்வோர்க்கு நெற்றியிலே ஒளிதோன்றும்
நினைப்பாக உருகிவரில் நிலையான இன்பமுண்டாம்.
[தண்ணீர்மலையானை...

பிரச்சனைகள் புரிவோரை, பிரித்தாள நினைப்போரை
பெரும்பிணிக்கே ஆளாக்கிப் பித்துமனம் தான்திருத்த
மாறா மனத்துயரில் மதிமயக்கி மனங்கலங்கி
மதிக்கும் நிலையுணர்த்தி மனத்தில் தெளிவுயர்த்தும்
[தண்ணீர்மலையானை...

திருத்தித் தெளிவூட்டித் திரும்பவும் அவனடியைச்
சேர்வதற்கு வழிவகுக்கும் தெண்டா யுதனடியை
இருத்தி மனத்தகத்தே இன்புறுவர் வாழ்வினிலே
ஏற்றம் தனையருள்வான் எழில் தண்ணீர்மலையானே.
[தண்ணீர்மலையானை...

தத்தும் சொத்தும்

''நகரத்தார் குரல்'' வெளியீட்டு விழாவில் அம்பத்தூர் நகரத்தார் மன்றத் தலைவர் திரு. எம். எஸ் பி. அருணாசலம் செட்டியார் வாழ்த்திப் பேசியபோது ''எங்கள் தொகுதிச் சட்ட மன்ற உறுப்பினரை நாங்கள் தத்தெடுத்துக் கொண்டோம். அதுபோல நீங்களும் அமைச்சர் காளிமுத்து அவர்களைத் தத்து எடுத்துக் கொள்ளலாம்'' என்றார்கள். உடனே நகரத்தார் குரலின் ஆசிரியர் திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் எழுந்து ''அமைச்சரைத் தத்தெடுத்துக் கொள்ள நம்மால் முடியாது. நம்மைத்தான் அமைச்சர் தத்தெடுத்துக் கொள்ள வேண்டும்'' என்று குறிப்பிட, குறுக்கிட்ட அமைச்சர் ''நான் ஒன்றும் சொத்தில் பங்கு கேட்கமாட்டேன். சிதம்பரம் செட்டியார் கவலைப்படவேண்டாம்'' என்றும் ''நான் 1963ல் தியாகராசர் கல்லூரியில் சேர்ந்தபோதே நகரத்தார்களால் தத்தெடுத்துக் கொள்ளப்பட்டேன். இன்றுதான் அவையில் அதற்கு அங்கீகாரம் கிடைத்திருக்கிறது'' என்று குறிப்பிட்ட போது அமைச்சரின் பெருமையை உணர்ந்த அவை, கரவொலி மூலம் அமைச்சரை வாழ்த்தியது.

உ

நகரத்தார்களின் முன்னேற்றம் கருதித்
துவக்கப்பட்டுள்ள "நகரத்தார் குரல்" பத்திரிகை
தனி வழியில் வெற்றி நடை போட
உளமார வாழ்த்துகிறோம்.

நாகப்பா சைக்கிள் மார்ட்

136-A, திண்டுக்கல் ரோடு,
மதுரை-625001.

கிளை & இணை நிறுவனங்கள் :

தஞ்சாவூர், திருவாரூர், கும்பகோணம் &
நெய்வேலி.

நாகப்பா ஆட்டோமோபைல்ஸ்

42, தானப்ப முதலி தெரு,
மதுரை-625001.

விநியோகஸ்தர்கள் :

ஹீரோ மெஜஸ்டிக் மொபெட்

91/1



வலையபட்டி

மு. ராம. தே. இராமநாதன்

வலையபட்டி - கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திலே முன் தோன்றிய மூத்த குடியினரான நகரத்தார் - தமிழ்க் குடியினர் - சிறப்போடு வாழும் ஊர். ஆம், அதுதான் எங்கள் ஊர் - வலையபட்டி.

''அன்பினால் அனைவரையும் வளைத்துப் போட்டதால், வலையாகப் பின்னிப் போட்டதால் 'வலையபட்டி' எனப் பெயர் ஏற்பட்டதோ'' எனத் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் கூறியபடி அன்பும், பண்பும், சீரும், சிறப்பும் மிக்கதோர் நகரம் வலையபட்டி.


தமிழ்கூறும் நல்லுலகில். பொலிவுமிக்க புதுக்கோட்டை மாவட்டத்தில், புகழ் சேர்க்கும் பொன்னமராவதிப் பேரூராட்சியின் ஓர் அங்கமாகத் திகழ்கிறது வலையபட்டி. திட்டமிட்டு நகரத்தை நிர்மாணிக்கும் எங்கள் மூதாதையரின் பொறியியல் திறனை இங்குள்ள சாலைகள் சாற்றி நிற்கின்றன.

வலையபட்டியின் புகழுக்கோர் மணிமகுடமாகத் திகழ்வது இங்குள்ள அருள்மிகு மலையாண்டிசுவாமி, வடுவகிர் விழியாள் உடனுறை வலம்புரிநாத சுவாமி திருக்கோயிலாகும். அழகிய சிறு குன்றின் மீது வானளாவ எழுந்துள்ள இராஜகோபுரத்துடன் கூடிய கோயிலும், குன்றோடிணைந்த திருக்குளமும், அமைந்திருக்கும் சிறப்பு, நகரத்தார்கள் வாழும் 96 ஊர்களில் வலையபட்டிக்கே உண்டு.

இச்சிறப்புமிக்க ஆலயம் நகரத்தார்களாலேயே, அவர்களின் உழைப்பினாலேயே கட்டப்பெற்று நந்தன ஆண்டு, தைத்திங்கள் 19ஆம் நாள் (1892) கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. மீண்டும் 1916ஆம் ஆண்டிலும், அதையடுத்து 1941ஆம் ஆண்டிலும், நான்காவதாக 1978ஆம் ஆண்டிலும் சிறப்பாகக் கும்பாபிஷேகங்கள் நடத்தப்பட்டன. விநாயகப் பெருமான் மலையாண்டியாகி மலைமீது அமர்ந்து அருள்பாலிக்கும் மாட்சி இந்த ஆலயத்திற்கோர் பெரும் சிறப்பாகும்.

தமிழகத்திலும், இந்தியாவின் பல்வேறு நகரங்களிலும், ஏன் வெளிநாடுகளிலும் வணிகம் செய்து பொருளீட்டி அவற்றை அறப் பணிகளுக்கு அள்ளித் தந்த வள்ளல் பெருமக்கள் வாழும் ஊர்

வலேயபட்டி. வணிகத்துறை மட்டுமின்றிப் பல்வேறு துறைகளிலும் சிறப்புப் பெற்று நிற்கும் சான்றோர்களைப் பெற்றுள்ள எங்கள் ஊர் நகரத்தார்கள் வாழும் ஊர்களிலேயே மூன்ருவது பெரும் ஊராகத் திகழ்கிறது. நகரத்தார்களின் குரலே ஓங்கி ஒலிப்பதில் இவ்வூரே முதன்மையாக நிற்கிறது.



வலேயபட்டியின் புகழுக்கோர் மணிமகுடமாக விளங்கும்
அருள்மிகு மலேயாண்டி சுவாமி கோவில்

அறிவுச் செல்வத்தை வாரி வழங்க வடுகநாதன் குடும்பத்தார் வலம்புரி வடுகநாதன் மேல்நிலேப் பள்ளியையும், பழனியப்பா குடும்பத்தினர் பழனியப்பா நடுநிலேப்பள்ளியையும், நா. மு. ராம. குடும்பத்தினர் செந்தமிழ்க் கலாசாலேயையும், சிதம்பரம் குடும்பத்தினர் சிதம்பரம் மெட்ரிக்குலேஷன் பள்ளியையும் இங்கு நிறுவி மாணவ மாணவியரின் அறிவுப் பசியை ஆற்றி வருகின்றனர். அறிவுப் பசியை ஆற்றும் அதே வேளேயில் இளஞ்சிருர்களின், ஏழைச் சிருர்களின் வயிற்றுப் பசியையும் போக்கும் முகத்தான் *PL. K.* முத்தாத்தாள் அறக்கட்டளேயை திரு. *PL.* குப்பான் செட்டியார் அவர்கள் நிறுவி தினந்தோறும் 100 ஏழை மாணவர்களுக்குத் தன் இல்லத்தில் மதிய உணவு அளிக்க ஏற்பாடு செய்துள்ளார்கள்.

மக்களின் உடல் நலம் காக்க ந. ராம. அ. பெரி. குடும்பத்தின பாப்பாயி ஆச்சி மகப்பேறு மருத்துவ மனே தொடங்க உதவினர். வலேயபட்டி வாழ் மக்களுக்கு உதவ மலேயாண்டிகோயிலின் அருகே

எழிலுடன் அமைக்கப்பட்டுள்ள நகர விடுதி இவ் வூர் மக்களுக்குப் பல்லாற்ருனும் பயன்படுகிறது. இவ்விடுதி திரு. க.மு.சு.சி. சின்னையா செட்டியார் அவர்களின் அருட் கொடையால் கட்டப்பட்டது.

பொழுதுபோக்கை மட்டும் கருத்தில் கொள்ளாது அறப் பணிகள் பல ஆற்றிவரும் யூனியன் கிளப் இந்நகரின் மற்ருேர் பெருமைக்குரிய அணிகலனுகும். ஏழைப் பிள்ளைகளுக்குப் புத்தகம் வழங்குதல் முதல், விழாக் காலங்களில் தொண்டு செய்தல் வரை அனைத்துப் பணிகளையும் சிறப்பாகச் செய்யும் இம்மன்றத்தில் அண்மையில் புதியதோர் சொந்தக் கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது. ஆண்டுதோறும் கொன்னையூர் முத்துமாரியம்மன் பூத்திருவிழாவை வலையபட்டியின் சார்பில் யூனியன் கிளப் உறுப்பினர்கள் மிகச் சிறப்பாக நடத்தி வருகிருர்கள். அடுத்த ஆண்டு, இவ்விழாவின் 50ம் ஆண்டாக மலர்கின்றது.

விழாக்கள் மலிந்த ஊரான எங்கள் ஊரின் சிறப்பான விழாக்களாக மார்கழித் திங்களில் திருவாதிரை தரிசனமும், புரட்டாசித் திங்களில் மகரநோன்பும், ஐப்பசித்திங்களில் சூரசம்ஹாரமும், தைத்திங்களில் பூசமும், பங்குனித் திங்களில் உத்தரத் திருவிழாவும் கொண்டாடப் படுகின்றன. ஆண்டுதோறும் மார்கழித் திங்களில் ஐயப்பன் பூஜை, அன்னதானம் நடத்தி, புறப்படும் விழா மிகச் சிறப்புடையது.

எங்கள் ஊரின் பெயராலேயே நாடும் நகரமும் அறியப் பெற்ற தவுல் உலகச் சக்கரவர்த்தி, கலைமாமணி, அரசவைக் கலைஞர், வலையபட்டி சுப்பிரமணியம் எங்களுக்குப் பெருமை சேர்க்கும் எங்கள் ஊர்க் கலைஞர் ஆவார்.

இயற்கை எழில் சூழ்ந்த எங்கள் ஊரின் அழகை ஊருணிகள் மேலும் உயர்த்துகின்றன. தேன்பாகு தோற்கும் நன்னீரைத் தந்துத வும் வையாபுரி, மக்கள் நீந்தி மகிழ்ந்து நீராடிக் களித்திட ஊரின் நடு மையத்தில் எட்டுப்பட்டை வடிவில் அமைந்த அடைக்கன் ஊருணி, க. சா. ஊருணி, சங்கரன் குண்டு போன்ற குளங்கள் இங்குள்ளன.

இத்துணைச் சிறப்புக்களையும் ஒருங்கே பெற்றுள்ள எங்கள் ஊர் எதிர்காலத்தில் மேன்மேலும் சிறப்புக்கள் பெற்றுப் புகழ் பெற்று விளங்க, இவ்வூர் வாழ் மக்கள் ஏற்றமுடன் வாழ எல்லாம் வல்ல மலையாண்டி சுவாமியை வாழ்த்தி வணங்குகிருேம்.

(மலையாண்டி என்ற பெயர் முருகனுக்குரியது. மலையில் இருப்பவனும் முருகனே. ஆனுல் வலையபட்டியில் மலையில் அமர்ந்த மலையாண்டியாக நகரத்தார்களின் குலதெய்வமான (மரகத) விநாயகரே அமைந்திருப் பது இவ்வூரின் தனிச் சிறப்பாகும். நாட்டாரும் நகரத்தாரும் இணைந்து வாழும் இவ்வூரில் பிறந்தவர்கள் தொழில் துறையில் பெரும்புகழ் பெற்றிருப்பது பாராட்டத்தக்கது. — ஆசிரியர்)

நகரத்தார் வரலாற்றுத் திட்டம்

நகரத்தார் வரலாறு குறிப்பிட்ட ஓரெல்லைக்கோ குறிப்பிட்ட ஒரு காலத்துக்கோ குறிப்பிட்ட ஓரினத்துக்கோ உட்பட்டதன்று. நகரத்தார் இருந்த இடம், சென்றவிடம் எல்லாம் வரலாற்றுத் தடங்கள் உண்டு. சைவ சமயம் கடல் கடந்து பரவியதற்கும் கோயிற் கலைகள் அங்கெல்லாம் நிலைத்திருப்பதற்கும் நகரத்தார் தம் பொதுத்தொண்டு மனமே தலையாய காரணமாம். நகரத்தார் மூலம் எவ்வகையாலும் உதவி பெறாத சுற்றுப்புற வினங்களோ பொது நிறுவனங்களோ, தொண்டுக் களங்களோ இல்லை என்று திடமாகக் கூறலாம். எதற்கும் நிதி வேண்டுமென்றால் நகரத்தாரை அணுகுவது உலக மரபாயிற்று.

தன் சாதிப் பற்றில் அழுத்தமில்லாத ஒரு குலம் உண்டென்றால் அது நகரத்தார் குலமே. நகரத்தார் தன்னினத்துக்குச் செய்த நலம் சிறிது. அளவிட்டு விடலாம். பிறவினங்கட்கும் இமயமுதல் குமரி வரையும் ஆற்றியிருக்கும் தொண்டுகள் அளப்பரியவை.

தமிழக வரலாற்றில் பல்லவர் காலம், பாண்டியர் காலம், சோழர் காலம், நாயக்கர் காலம் போல நகரத்தார் காலம் என்று ஒரு காலக் கட்டம் உண்டு. நகரப் பெரு மக்களுள் கொடையாளர்களேயன்றிப் பெரும் புலவர்களும் உளர். நகரப் புலவர்கள் படைத்த இலக்கியங்கள் மறுபதிப்புக்கும் தனியாய்வுக்கும் உரியவை; நகரக் கோயில்களின் வரலாறும் மரபுகளும் விரிவான ஆய்வுக்கு இடந் தருபவை.

நகரத்தார் வரலாறு ஒரு குல வரலாறன்று; தமிழ்நாட்டு வரலாற்றிலும் தமிழ்மொழி வரலாற்றிலும் சமய வரலாற்றிலும் இந்திய விடுதலை வரலாற்றிலும் தொழில் வரலாற்றிலும் அயலகத் தொடர்பு வரலாற்றிலும் கணிசமான பங்குடையது. இவை பற்றிய பேராய்வு வளரும் பொதுவாய்வுக்குத் துணைசெய்யும் என்பது என் கருத்து. ஆதலின் ஒரு வேண்டுகோள்: முழு நகரத்தார் ஆய்வுத் திட்டம் ஒன்று பல்கலைக் கழகத்தில் நிறுவுவதற்கு நகரத்தார்கள் முன்வருதல் வேண்டும். இதற்குரிய பெருநிதி வைப்பினைப் பல்கலைக்கழகத்தில் ஏற்படுத்த வேண்டும். ஒன்பது கோயில்களும் நகரத் தனிச் செல்வர் களும் கூடி முயன்றால் நிதிவைப்பு அரியதன்று. பன்னூறு கோடிகள் உலகிற்குக் கொடைசெய்த இவ்வினம் தன்னின வரலாற்றாய்வுக்கு சில இலட்சங்கள் வழங்குவது பெரிதா? முடியாதா? பெருஞ் செல்வர் ஒருவர் நினைத்தாற் போதுமே!

– டாக்டர் வ. சுப. மாணிக்கம்
துணை வேந்தர்
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை

எல்லாச் சமூகங்களுக்கும் வழிகாட்டியாக நகரத்தார் சமூகம் உள்ளது

நகரத்தார் நல உரிமை மாநாட்டு மலர் வெளியீட்டு விழாவில் மதுரை மேயர் எஸ். கே. பாலகிருஷ்ணன் பேச்சு

''நகரத்தார் குரல்'' மாத இதழின் வெளியீட்டு விழாவை அடுத்து, நகரத்தார் நல உரிமை மாநாட்டு மலர் வெளியீட்டு விழா 25-2-82 அன்று மாலை மதுரை நகர விடுதியில் சிறப்பாக நடைபெற்றது.

லெ. அழகுசுந்தரம் செட்டியார்

திரு. லெ. அழகுசுந்தரம் செட்டியார் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினுர்கள். மாநாடு சிறப்பாக நடைபெற்றது பற்றியும் மக்களின் ஆர்வத்தைப் பற்றியும் எடுத்துரைத்து நாம் இனிச் செய்ய வேண்டிய பணிகள் பற்றியும் குறிப்பிட்டார்கள்.

வணக்கத்திற்குரிய மேயர்

வணக்கத்திற்குரிய மதுரை மாநகராட்சி மேயர் திரு. எஸ். கே. பாலகிருஷ்ணன் அவர்கள் தலைமையேற்று இவ்விழாவைச் சிறப்பித்தார்கள். வணக்கத்துக்குரிய மேயர் அவர்கள் தலைமை உரை ஆற்றிய போது ''எல்லாச் சமூகங்களுக்கும் வழிகாட்டியாக நகரத்தார் சமூகம் உள்ளது. சைவ சித்தாந்தம் இந்தியாவிற்கே பெருமை. தமிழுக்கும் பெருமை. இந்தச் சைவத்தையும் தமிழையும் அகில உலகத்திற்கும் அறிமுகப்படுத்தியவர்கள் நகரத்தார்கள். எந்தச் சமூகமும் இந்த அளவு அறப்பணி செய்ததில்லை. இன்றைய நிலையில் நகரத்தார்களின் பணி இன்றியமையாதது; பெருமைமிக்க உங்களது காரைக்குடி மாநாட்டில் என்னுல் கலந்து கொள்ள முடியாமல் போய்விட்டது. இந்த மலர் வெளியீட்டு விழாவில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்'' என்று குறிப்பிட்டார்கள்.

மலர் வெளியீடு

நகரத்தார் நல உரிமை மாநாட்டு மலரை திரு. சுப. அ. நடராசன் செட்டியார் அவர்கள் வெளியிட திரு. சு. பழ. அ. லெட்சுமிமெய்யப்பன் அவர்கள் பெற்றுக்கொண்டார்கள்.

இவ்விழாவில் மதுரை மாநகராட்சியின் முன்னுள் துணை மேயர் திரு. கே. எஸ். சந்தானம், பொற்கிழிக் கவிஞர் திரு. சொ. சொ. மீ. சுந்தரம், மதுரை வங்கியைச் சேர்ந்த திரு, எம். சிதம்பரம், திரு, இராம. சுப்பிரமணியம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினுர்கள்.

முன்னுள் துணைமேயர்

மதுரை முன்னுள் துணைமேயர் திரு. கே, எஸ். சந்தானம் அவர்கள் பேசியபோது தான் பர்மாவில் நகரத்தார்களிடம் பணியாற்றியதாகவும் நகரத்தார்கள் தங்களுக்கென்று சொந்தத் தொழில்களைப் பெற்றிருந்



நகரத்தார் நல உரிமை மாநாட்டு மலர் வெளியீட்டு விழா விற்குத் தலைமையேற்ற வணக்கத்திற்குரிய மதுரை மாநகராட்சி யின் மேயர் எஸ். கே. பாலகிருஷ்ணன் அவர்களுக்கு வலையபட்டி திரு. எஸ்பி. முத்துராமன் செட்டியார் பொன்னாடை அணிவிக்கிறார்



நகரத்தார் நல உரிமை மாநாட்டு மலரை திரு. சுப. அ. நடராஜன் செட்டியார் வெளியிட, திரு. சு. பழ. அ. லெட்சுமி மெய்யப்பன் பெற்றுக்கொள்ளும் இனிய காட்சி.



இவ்விழாவில் வணக்கத்திற்குரிய மேயரும் சிவநெறிச் செல்வரும் குதூகலித்திருக்க, திரு. அழகுசுந்தரம் செட்டியார் அருகிலிருக்க பொற்கிழிக் கவிஞர் திரு. சொ. சொ. மீ. சுந்தரம் வாழ்த்துரை வழங்குகிறார்.



காரைக்குடி மாநாட்டில் இரவு பகல் பாராது தொண்டாற்றிய திரு. இராம. ஏகப்பனுக்கு அமைச்சர் மாண்புமிகு கே. காளிமுத்து அவர்கள் மாலை அணிவித்துக் கௌரவிக்கும் இனிய காட்சி.

தாலும் தங்கள் பிள்ளைகளை அடுத்தவர்களிடம் அனுப்பி பயிலச் சொல்வார்கள் என்றும் அறப்பணி, கல்விப்பணிகளில் நகரத்தார்கள் தனிச் சிறப்புடையவர்கள் என்றும் மாபெரும் கவிஞன் கண்ணதாசனைத் தந்த சமூகத்திற்கு தான் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதாகவும் கூறினார்,

வி. என். சிதம்பரம் செட்டியார்

திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் நன்றி கூறுகையில் மாநாட்டிற்காக எடுத்துக்கொண்ட முயற்சிகளையும் மக்களுடைய, அபிமானிகளுடைய ஒத்துழைப்பையும் பாராட்டிப் பேசினார்கள்.

இவ்விழா சார்பில் வணக்கத்திற்குரிய மேயர் திரு. எஸ். கே. பாலகிருஷ்ணன் அவர்களுக்கு திரு. எஸ் பி. முத்துராமன் செட்டியார் அவர்கள் பொன்னாடை அணிவித்தார்கள்.

பரிசு வழங்கல்

இவ்விழாவில், மலரைத் தயாரிக்க உதவிய மலர்க் குழுவினரான டாக்டர் தமிழண்ணல், திரு. சொ. சொ. மீ. சுந்தரம் மற்றும் மீனாட்சி அச்சக உரிமையாளர் திரு. செ. செல்லப்பன் ஆகியோருக்கு தமிழக வேளாண்மைத்துறை அமைச்சர் மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் பரிசு வழங்கிக் கௌரவித்தார்கள்.

காரைக்குடி மாநாட்டில் அருந் தொண்டாற்றியவர்களுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாலையணிவித்தார்கள்.



காரைக்குடி மாநாட்டில் தொண்டாற்றிய திரு. எல். சுந்தரத்திற்கு அமைச்சர் மாண்புமிகு கே. காளிமுத்து அவர்கள் மாலை அணிவித்துக் கௌரவிக்கிறார்.

நம்மவர்களில் அரசியல்வாதிகள்:

பழ. கருப்பையா பேட்டி

கலைகள் பலவிதம். அவற்றில் பேச்சுக் கலை ஒரு விதம். இந்தப் பேச்சுக்கலை எல்லோருக்கும் கைவந்தது என்று சொல்லிவிட முடியாது. அரசியல்வாதிகளில் கூட மேடை ஏறிப் பேசத் தெரியாதவர்கள் இருக்கிறார்கள். வீட்டிற்குள் எதை வேண்டுமானாலும் பேசலாம்; எப்படி வேண்டுமானாலும் பேசலாம். (நம்மவர்களில் வீட்டில் கூட பேசத் தெரியாதவர்கள் பலர் இருக்கிறார்கள்) ஆனால் மேடை ஏறிப் பேசும் போது மிகக் கவனமாகப் பேச வேண்டும். நம் பழ. கருப்பையா அவர்கள் மைக்கைப் பிடித்துவிட்டால் போதும். பேச்சு சரளமாக, ஆணித்தரமாக தூய தமிழில் வெளிவரும். அரசியலும் இலக்கியமும் அவருக்குத் தேனும் பாலும் போல.

குண நலன்கள்

அரசியலில் ஜனதாக் கட்சியைப் பற்றித் தெரிந்தவர்கள் நம் பழ. கருப்பையா அவர்களைப் பற்றி அறியாமல் இருக்க முடியாது. நம்மவர்களில் விரல் விட்டு எண்ணக்கூடிய அரசியல்வாதிகளில் இவரும் ஒருவர் என்பது நமக்குப் பெருமை. இவரது குரலைப் போலவே இவரது தோற்றமும் கம்பீரமானது. இவர் தீவிர அரசியல்வாதியானாலும் மென்மையான உள்ளம் படைத்தவர். நகரத்தார்களுக்கே உரிய பல நல்ல பண்புகளில் உபசரிக்கும் பண்பு ஒன்று. அந்தப் பண்பை இவரிடமும் காணுகிறோம். இவரது பேச்சில் தெளிவு மட்டுமல்ல, மதிநுட்பமும் இருக்கிறது.

தனித் தமிழியக்கம்

38 வயது இளைஞரான பழ. கருப்பையா அவர்கள் தமது 16 வயதினிலேயே தமிழில் அதிக ஈடுபாடு கொண்டவர். எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்பதில் அன்றும் இன்றும் விருப்பமுடையவர். இலக்கியம், அரசியல், பொருளியல் துறைகளில் இவர் எழுதியுள்ள கட்டுரைகள் ஏராளம்! அத்தனையும் தேன்சுவை விருந்து. தனித் தமிழியக்கத்தில் அதிக ஈடுபாடு கொண்ட இவர், சில ஆண்டுகளுக்கு முன் காரைக்குடி (இதுவே இவர் பிறந்த ஊர்) கொப்புடைய நாயகி அம்மன் கோவில் முன்பாக பேராசிரியர் வெ. சு. அழகப்பன் அவர்கள் தலைமையில் கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டுமெனக்கோரி நடத்தப்பட்ட போராட்டத்தில் கலந்து கொண்டதையும் பின்னர் அது தொடர்பாக கூட்டங்கள் இயக்கங்கள் நடத்தியதையும் நாம் இன்னும் மறந்துவிடவில்லை.

தமிழில் திருமணம்

கோயில்களில் அர்ச்சனை மட்டுமல்ல வீடுகளில் திருமணங்களும் தமிழில் மந்திரம் ஓதி நடைபெற வேண்டுமென பிடிவாதம் செய்து 1970ல் தன் திருமணத்தை அதேபடி நடத்தியும் காட்டிய செயல்வீரர். அதுமட்டுமல்ல. இவரது இல்லத் திருமணங்களில் எல்லாம் தமிழ் முழக்கம்தான்.

இவரது தந்தை திரு. பாசின் பழனியப்ப செட்டியாரவர்கள் காரைக்குடி நகர காங்கிரஸ் கமிட்டியில் செயலாளராகப் பணியாற்றிய வர்கள். (*M.L.A.* சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் தலைவராக இருந்தபோது)

போராட்டங்கள்

அரசியல் என்று வரும்போது போராட்டம், சிறைவாசம் யெல் லாம் இல்லாமல் போகுமா? அதற்கெல்லாம் அஞ்சுபவரல்ல நம் பழ. கருப்பையா அவர்கள். 1971ல் கள்ளுக்கடைகளைத் திறக்கக் கூடாது என காரைக்குடியில் மறியல் செய்து சிறை சென்று காமராச ரின் அன்புக்குப் பாத்திரமானர். மின் கட்டணத்தைக் குறைக்க



வேண்டி 1974-75ல் விவசாயப் போராட்டத்தில் கலந்துகொண்டு சிறை சென்றார். நெருக்கடி நிலையின்போது இவருக்கு ஏற்பட்ட நெருக்கடிகள் எத்தனையோ! எல்லாவற்றையும் விட காரைக்குடி காவல் நிலையத்தில் ஒரு பெண் கற்பழிக்கப்பட்டதாகக் கூறப்பட்ட வழக்கில் இவர் சிறை சென்றதும் அங்கு 8 நாட்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியதும் அரசு இவர் மீது தொடரப்பட்ட வழக்கைத் திரும்பப் பெற்று இவரை விடுதலை செய்ததும் அரசியல் வரலாற்று நிகழ்ச்சிகளில் குறிப்பிடத் தக்கது.

பதவிகள்

பழைய காங்கிரஸ் இருந்தபோது பழ. கருப்பையா அவர்கள் காரைக்குடி நகர் காங்கிரஸ் கமிட்டித் தலைவராக, இராமநாதபுர மாவட்டத்தின் தலைவராகப் பணிபுரிந்தார். பழைய காங்கிரஸ் ஜனதாவாக ஆனபோது பெரிய பதவிகளில் ஒன்ருன மாநிலப் பொதுச் செயலாளர் பதவியில் 3 ஆண்டுகள் அரிய சேவை செய்து திரு. மொரார்ஜி தேசாய் மற்றும் ஜனதாவின் உயர்மட்டத் தலைவர்களின் அன்புக்குப் பாத்திரமானுர்.

கட்சி மாறுவது இவருக்குப் பிடிக்காத விஷயம். இவர் இருந்த பழைய காங்கிரஸ் ஜனதாவாக ஆனதே தவிர, இவர் இன்றும் அதே கட்சியில்தான் இருக்கிருர்.

பழ. கருப்பையா அவர்களைப் பேட்டி கண்டு எழுதுவதில் ''நகரத்தார் குரல்'' பெருமை கொள்கிறது.

''நம்மவர்களின் முன்னேற்றத்திற்கு வசதி உள்ளவர்கள் எப்படி உதவலாம் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?'' என்று கேட்டபோது—

''வேலைக்கு ஆள் எடுக்கும்போது நகரத்தார் இளைஞர்களைத் தேர்ந்தெடுக்கலாம். அவர்கள் படிப்பில் சோடையா? திறமையில் சோடையா? நாணயத்தில் சோடையா? எதில் சோடை?

நகரத்தாரில் ஆலை முதலாளிகளும் தொழிலதிபர்களும் குறைவா என்ன? இவர்களெல்லாம் நம் இனத்தார்க்கு உதவுவது என்பதில் உறுதியான கருத்துடையவர்களாக இருந்தால் போதுமே! நாம் அரசை நாடி எந்தத் தயவுக்கும் செல்ல வேண்டிய தேவையே ஏற்படாதே!

அப்படித்தானே நாம் ஒரு காலத்தில் வாழ்ந்தோம். இங்கிலீசுக் கொடி இந்த நாட்டில் பறந்த காலத்தில் நாம் அரசிடம் எதற்காவது மனுச் செய்து கொண்டிருக்கிரோமா? மன்ருடியிருக்கிரோமா?

அரசு என்று ஓர் அமைப்பு இருப்பதாகவாவது நாம் கண்டு கொண்டிருக்கிரோமா? இல்லையே! ஏன்? அரசின் தயவில் வாழ வேண்டிய தேவையை ஏற்படுத்திக் கொள்ளாத அளவிற்கு நாம் ஒரு தன்னிறைவுச் (Self-Sufficient) சமூகமாக அன்று திகழ்ந்தோம்.

ஒருவன் பதினைந்து வயதில் 'பெட்டியடிப் பையனுகத்' தொலைக்குப் போவான்; அடுத்த கணக்கு 'அடுத்த ஆளாகப்' போவான்; நான்காவது கணக்கு 'மேலாளாக'ப் போய்க் கூட்டாளியாவான்; பின்பு 'தன'த்தில் கடை வைப்பான்; மகளும் சமைவாள்; எல்லாம் தோதாக இருக்கும். இப்படி அடிப்படியே இல்லாத குடும்பத்தில் பிறந்தவர்களும் அன்று தன் காலத்திற்குள்ளேயே 'ஆளாய்ப் பேராய்' வர முடிந்தது.

''அப்பன் முதலுமில்லை; அய்யாக்கள் சொத்துமில்லை
முந்தி முதலுமில்லை; முப்பாட்டன் சொத்துமில்லை
என்னைப் பெற்ற ஐயா தன் புத்தியாலே தகுந்த குடியானுர்
புத்தி யுக்தியாலே ஒசந்த குடியானுர்''

இப்படி ஓர் ஆச்சி ஒப்பாரி பாடினார்களாம். ஒருவன் கொஞ்சம் கெட்டிக் காரனாய் இருந்தால் போதும்; சமூகம் கைதூக்கி விடுவதற்கு அன்று காத்துக் கிடந்தது. ஆகவே செட்டிநாடு பரவலாக நல்ல நிலையில் இருந்தது.

இன்று அத்தகைய நிலை இல்லை; பெரிய மார்க்காக்கள் சின்ன இடங்களில் சம்பந்தம் செய்ய வேண்டாம்; வேலை கொாடுத்து ஆதரிக் கக் கூடாதா? கொஞ்சம் நல்ல சம்பளம் சாடிக்கை கொடுக்கக் கூடாதா? அவர்களுடைய நல்லது கெட்டதில் பங்கெடுத்துக் கொள்ளக்கூடாதா?

தன்னோடு தன் இனத்தாரையும் வாழவைப்பதை ஒரு குறிக் கோளாகக் கொள்ளக் கூடாதா?

அப்படிச் சுற்றமும் இனமும் தன்னைத் தழுவி தன் மீது படர்ந்து வாழுகின்ற அளவுக்கு யாரெல்லாம் விளங்குகிறார்களோ அவர்களைப் பெருமைப்படுத்திக் கொண்டாட வேண்டியது நகரத்தார் சங்கங்களின் தலையாய கடமை.

பணம் வைத்திருப்பதே சிறப்பில்லை; பணத்தின் பயன் தெரிந்திருப் பதுதான் சிறப்பு''- இவ்வாறு அவர் பதிலளித்தார்.

(அடுத்த இதழில் முடியும்)



வள்ளல் அழகப்பர் புகழ் பரப்பவும் அவர் வழி வந்த நகரத்தார் ஆசிரியர்கள், மாணவர்கள் நலன் காக்கவும் 'அழகப்பர் நற்பணி மன்றம்' என்ற பெயரில் காரைக்குடியில் 7-3-82 அன்று ஒரு மன்றம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இம் மன்றத்தின் புரவலராகவும், தலைவ ராகவும் திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்களும் செயலாள ராக திரு. முரு. அண்ணாமலை அவர்களும் இருந்து வருகிறார்கள். பேராசிரியர்கள் திரு. வெ. இராமசாமி, திரு. தே. தேனப்பன், திரு. மு. இராமசாமி, திரு. இராம. சுப்பையா, திரு. வீ. வீரப்பன் ஆகியோர் இதன் நிர்வாகக் குழுவினர்.

துவக்க விழாவிற்கு திரு. வி. என். சிடி. தலைமை ஏற்க திரு. சித. சிதம்பரம் M. L. A. துவக்க உரை நிகழ்த்த, பேராசிரியர்கள் டாக்டர் வெ. சு. அழகப்பன், சொ. சொ. மீ. சுந்தரம், திரு. பழ. கருப்பையா ஆகியோர் வாழ்த்துரை வழங்க திரு. முரு. அண்ணாமலை வரவேற்புரை நிகழ்த்த திரு. ப. இராமசாமி நன்றி நவில, விழா இனிது நிறைவுற்றது.

நகரத்தார் சமூகத்தின் ஏழை எளிய மாணவ, மாணவியரின் கல்விக்கும் வேலை வாய்ப்புக்கும் இந்த மன்றம் பாடுபடும்.

திருமணம்

மதுரை மீனாட்சி புத்தக நிலைய அதிபர் அரிமழம் செல்லப்பன் அவர்களின் புதல்வரும், மீனாட்சி அச்சக உரிமையாளருமான C திருநாவுக்கரசு D. P. T.க்கும், இராங்கியம் ராம. பழ. சிங்காரம் செட்டியார் அவர்களின் புதல்வி சாந்தாவுக்கும் இராங்கியத்தில் 31-1-82 அன்று திருமணம் சிறப்புற நடைபெற்றது. அவ்வமயம் அரிமா சங்கப் பிரமுகர்களும், மதுரை இராமநாதபுரம் வர்த்தக சங்க உறுப்பினர்களும், திருவாளர்கள் வி. என். சிதம்பரம், குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா, கவிஞர் செல்ல கணபதி, கவிஞர் மீரா இளம் பாரதி போன்ற இலக்கியச் செல்வர்களும் மற்றும் பெருமக்கள் பலரும் நேரில் வந்திருந்து மணமக்களை வாழ்த்தியருளினார்கள்.

அவை, அப்படித்தான்!

எல். சுந்தரம்

'மாபெரும் விலைக் குறைப்பு' என்று சில துணிக் கடைக்காரர்கள் விளம்பரம் செய்வார்கள். ஆனால் அவர்கள் குறைப்பதோ, ரூபாய்க்குப் பத்துக் காசுகளாக இருக்கும்!

'நேரம் இருவருக்கும் பொன்னானது' என்ற வாசகம் உள்ள அட்டை, சில வணிக நிறுவனங்களில் தொங்கவிடப்பட்டிருக்கும். ஆனால் அங்குள்ளவர்கள் தொழிலுக்குச் சம்பந்தமில்லாமல், சளைக்காமல் பேசிக் கொண்டிருப்பார்கள்!

'குடி தண்ணீர் - வீணாக்காதீர்கள்' என்று பலவிடங்களில் எழுதப்பட்டிருக்கும். ஆனால் அதைப் பெரும்பாலோர் வேறு காரியங்களுக்குத்தான் பயன்படுத்துவார்கள்!

'ஒலி எழுப்புக' 'ஒலி கொடுத்தால் வழி கிடைக்கும்' என்று சில லாரிகளில் பின்புறம் எழுதப்பட்டிருக்கும். லாரிக்குப் பின்னால் செல்லும் வாகனத்திலிருந்து வழி வேண்டி, செவிப்பறை கிழிய, ஒலி கொடுத்தாலும் சில சமயம் வழி கிடைப்பதில்லை!

சைக்கிள்களைப் பாதுகாப்பதற்கென்று சில விடங்களில் கட்டணம் வசூலிப்பார்கள். 'சைக்கிள்கள் காணாமல் போனால் அதற்கு நாங்கள் பொறுப்பல்ல' என்ற அறிவிப்பும் பக்கத்திலேயே இருக்கும்!

'சிகரெட் குடிப்பது உடல் நலத்திற்குத் தீங்கானது' என்று அறிவித்துக் கொண்டே பலர் தங்களது சிகரெட்டுகளுக்கு விளம்பரம் தேடிக் கொள்கிறார்கள்!

'இது பொது வழியல்ல' என்று அந்த இடத்தின் சொந்தக்காரர் போர்டு போட்டிருப்பார். ஆனால் அவர் சுவர் எழுப்பும் வரை, பலர் அதைப் பொதுச் சொத்தாகவே கருதுகிறார்கள்!

சில அலுவலகங்களில், தொழிற்சாலைகளில் ஆட்கள் வேலைக்குச் சேர்ந்து கொண்டேயிருப்பார்கள். ஆனால் 'வேலை காலி இல்லை' என்ற போர்டும் தொங்கும்!

பாலில் தண்ணீரைக் கலக்கக்கூடாது என்கிறது சுகாதாரச் சட்டம். அதனால்தான் சிலர் தண்ணீரில் பாலைக் கலந்து விற்கிறார்கள்!

திரைப்படக் கம்பெனியார் சுவரொட்டிகளை ஒட்டுகிறார்கள். தனியார் வீட்டுச் சுவர்கள் அதைத் தாங்கிக்கொள்கின்றன. ஆனால் வரி பெறுவதோ நகராட்சிகள், மாநகராட்சிகள்!

'வாகனங்கள் போகக்கூடாது' என்று அறிவிப்பு இருக்கும். அந்த வழியில்தான் விரைவாகச் சைக்கிளில் செல்வார் போலீசுக்காரர் - அதுவும் இரவில் விளக்கு இல்லாமல்!

'ஹாரன் அடிக்கக் கூடாது' என்ற அறிவிப்பு சில மருத்துவ மனைகள் அருகில் இருக்கும். அங்குதான் சில காரோட்டிகள் பெருத்த ஒலி எழுப்புவார்கள்!

பெரிய விழா மேடைகள் அமைக்க, சாலைகளின் மத்தியில் குழி பறிப்பார்கள். பறித்த குழியை வீணாக்குவானேன் என்று சைக்கிள் ஓட்டிகளின் நலத்திற்கென்று விட்டுவிடுவோரும் உண்டு!

'இது வெள்ளி விழாப் படம்' என்று சில படத் தயாரிப்பாளர்கள் விளம்பரம் செய்வார்கள். அப்படம் சில வெள்ளிக்கிழமைகளைக் கூடத் தாண்டாது. பப்படமாகிவிடும்!

பழம் விற்கிறவன் 'மிட்டாய் ஆரஞ்சு; புளித்தால் காசு வேண்டாம்' என்பான். வாங்கிச் சுவைத்துப் பார்த்தால் சில சமயங்களில் அது எலுமிச்சம் பழத்தையே மிஞ்சிவிடும்!

முன்னே சென்றுவிட்ட தனக்கு வேண்டியவரை அழைக்க-அதுவும் நூற்றுக் கணக்கானோர் இங்கும் அங்கும் உலவும் வேளையில்-கையொலி எழுப்புகிறார்கள் சிலர். கொஞ்சமாவது சிந்திக்க வேண்டாமா?

'குடி குடியைக் கெடுக்கும்; குடிப்பழக்கம் உடல் நலத்தைக் கெடுக்கும்' என்று விளம்பரம் செய்து கொண்டே மது விற்பனை மும்முரமாக நடைபெறுகிறது.

'நோட்டீஸ் ஒட்டாதே, மீறினால் தண்டனை உண்டு' என்று அறிவிப்புச் செய்கிறார்கள். அந்த அறிவிப்பை மறைத்து சில சமயங்களில் நோட்டீஸ் ஒட்டப்படுவதும் உண்டு.

'இங்கு சிறுநீர்க் கழிக்காதே' என்று அறிவிப்புச் செய்கிறார்கள். போதாததற்கு சுவற்றோரமாக தெய்வங்களை உண்டாக்குகிறார்கள். ஆனாலும் அசுத்தம் அப்படியேதான் இருக்கிறது.

'இன்று ரொக்கம் நாளை கடன்' என்று போர்டு போடுகிறார்கள். அப்படிப்பட்டவர்களே சரக்கைக் கொடுத்துவிட்டு மாதக் கணக்கில் காத்திருக்கிறார்கள் பணம் பெற!

சில சினிமாப்பட வெள்ளி விழாக்களில் பலருக்கும் பரிசுகள் கொடுக்கப்படும். ஆனால் விழா முடிந்தவுடன் பார்த்தால் 3 அல்லது 4 பரிசுகள்தான் உண்மையிலேயே வாங்கப்பட்டிருப்பது தெரியும்!

கருமுத்துவும் காளிமுத்துவும்

''கருமுத்து தியாகராசச் செட்டியார் என்னைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தி, என் வாழ்வில் தமிழை மலரச் செய்தார். என் படிப்பு, இடையில் ஏற்பட்ட போராட்டத்தின் காரணமாகத் தடைப்படும் என்ற நிலை வந்தபோது அரசின் அச்சுறுத்தலையும் பொருட்படுத்தாமல் என் படிப்புத் தொடர அனுமதி வழங்கியவர் கருமுத்து. அந்தக் கருமுத்து இல்லையேல் இந்தக் காளிமுத்து இல்லை.''

— மாண்புமிகு டாக்டர் காளிமுத்து
தமிழக வேளாண்மைத்துறை அமைச்சர்

''நகரத்தார் குரல்'' வெளியீட்டு விழாவில் கூறியது.



வள்ளி மணவாளா

பொற்கிழிக் கவிஞர் அரு. சோமசுந்தரன்

வள்ளி மண வாளா ! முருகா !
வாய்த்த வடி வேலா !
துள்ளி வரும் வேலா முருகா !
தோகை மயில் பாலா !

சந்த இசை வடிவா முருகா !
சாத்திரம் தோத்திரமாய்க்
கந்த மலை ஒளிர முருகா !
காட்சி கொடுத்தவனே !

சூரர் படை அழிய முருகா
சோதி வடிவெடுத்தாய்
கோர மனம் அழிய முருகா
கோல மயில் எடுத்தாய்

ஆழிப் படை அழிய முருகா !
ஆர்ப்ப ரித்த படைகள்
கோழிக் கொடியி னுள்ளே முருகா
கொக்கரக்கோ ஒலிகள் !

ஆறுபடைக ளெல்லாம் முருகா
ஆறுதல் கூறு படை !
ஏறு மலைகள் எல்லாம் முருகா
ஏழு பிறவித் தடை !!

நாடி நரம்புகளில் முருகா
நாத இசை பரவ
ஓடி வருகிறோமே முருகா
உச்சி முகர்ந்திடுவாய்.

மதுரை-625009, கிருஷ்ணபுரம் 4 ஆவது குறுக்குத் தெரு, டோர் நிர். 20ல் உள்ள எக்ஸ்போ பிரிண்டர்ஸில் அச்சிட்டு, சுப. அ. நடராசன் அவர்களால் மதுரை, வடக்குச் சித்திரை வீதி, டோர் நிர். 25லிருந்து வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: வி. என். சிதம்பரம்.



எங்களது
ஸ்ரீ கலைமகள் இண்டஸ்ட்ரீஸின்
தயாரிப்புகள் :-

தெய்வத்தைக் கண்ணெதிரே
காணும்

சுவாமி படங்கள்

குழந்தைகள் சுலபத்தில் கற்றுக்கொள்ளும் வகையில் பல வண்ணப் படங்களுடன் கூடிய தமிழ், ஆங்கிலம், இந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, மராட்டிய மற்றும் பல மொழிகளில் பல சைஸ்களில் தயாரிக்கப்பட்டு அகில இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் பாராட்டுப் பெற்ற பாடப் புத்தகங்கள் முதலிடம் வகித்து விற்பனையாகி வருகிறது.

பொங்கல் வாழ்த்துக்கள்
கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள்
புதுவருட வாழ்த்துக்கள்
தினசரி காலண்டர்கள்.

25 ஆண்டுகளாக ஆயிரக்கணக்கான டிசைன்களைத் தயாரித்து புதுமையை உருவாக்கியிருக்கிறோம்.

எங்கள் காட்சிக் கூடம்

ஸ்ரீ கலைமகள் இண்டஸ்ட்ரீஸ்

35, கீழ ஆவணி மூல வீதி, மதுரை-625001.

தொலைபேசி எண் 24478
31666

தந்தி : கலைமகள்
த. பெ. எண் 105

"கலைமகள்" என்றாலே கைராசியான ஸ்தாபனம்
(1955 *to* 1980 வெள்ளி விழா)